**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C)
**SPLCC.No.18/2025 - PW-42**

| | |
|---|---|
| Name | திரு.முனுசாமி |
| Father Name | பெருமாள் |
| Village /Area | குப்பிடிச்சாத்தம் |
| Taluk | ஆற்காடு |
| Occupation | கிராம உதவியாளர் ஓய்வு |
| Age | 76 |
| Religion | இந்து |
| Aadhar Card No. | 8858 5610 0879 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 29.01.2026.

**எதிரிகள் 3 முதல் 10 வரை ஆஜர். 11 முதல் 15 வரை எதிரிகள் ஆஜர் இல்லை. பா.நா.சு.ச பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை –**

நான் ஆற்காடு வட்டம், குப்பிடிச்சாத்தம் கிராமம், பஜனை கோவில் தெருவில் வசிக்கிறேன். நான் குப்பிடிச்சாத்தம் கிராமத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து, 2009ம் ஆண்டு ஜீன் மாதத்தில் பணி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 2008ம் ஆண்டு குப்பிடிச்சாத்தம் கிராமத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கிராம நிர்வாக அதிகாரியாக ஞானம் பணிபுரிந்தார். கிராம நிர்வாக அதிகாரி சிட்டா, அடங்கல் கொடுத்தால் அவைகளில் நான் கிராம நிர்வாக அலுவலரின் முத்திரையை பதித்து கொடுப்பேன். வெங்கடேஷ்வரா எலக்ட்ரிகல்ஸ் மற்றும் குரு எலக்ட்ரிகல்ஸ் பற்றி எனக்கு தெரியாது. வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் என்னை விசாரித்த போதும் இந்த விவரங்களைதான் சொன்னேன்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி, அனுமதி வழங்கப்படுகிறது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் என்னை விசாரித்த போது, 2008ம் ஆண்டில் குப்பிடிச்சாத்தம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலர் ஞானம் இருந்த சமயத்தில் விவசாயிகளுக்கு மானிய விலை பம்ப்செட் விநியோகஸ்தர்களான ஆரணியைச்சார்ந்த நியூ வெங்கடேஷ்வரா எலக்ட்ரிகல்ஸ் அன்ட் ஹார்டுவேர்ஸ் மற்றும் குரு எலக்ட்ரிகல்ஸ் உரிமையாளர்கள் குப்பிடிச்சாத்தம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்து என்னிடம் குப்பிடிச்சாத்தம் கிராமத்தைச் சார்ந்த மானிய விலை பம்ப் செட் வாங்க தங்கள் கடையில் Quotation வாங்கி விண்ணப்பித்துள்ளதாகவும், அதற்காக கிராம நிர்வாக அலுவலரிடம் அடங்கல், FMB மற்றும் உரிமையாளர் சான்று ஆகியவற்றை பெற்றுத்தருமாறு என்னிடம் கேட்டதாகவும், நானும் நல்ல எண்ணத்தில் எங்கள் ஊர் விவசாயிகளுக்கு மானிய விலையில் பம்ப் செட் கிடைக்கும் என்ற நோக்கத்தில் கிராம நிர்வாக அலுவலர் ஞானத்திடம் மேற்சொன்ன சான்றுகளை பெற்றுக்கொடுத்தேன் என்றும், ஆனால் பம்ப் செட் விநியோகஸ்தர்கள் சான்று வாங்கி சென்ற சுமார் 2, 3 மாதங்கள் கழித்தும் விவசாயிகளுக்கு பம்ப் செட் வழங்கப்படவில்லை என்பதால், அதன் பிறகு மீண்டும் மேற்சொன்ன விநியோகஸ்தர்கள் வந்து சான்று கேட்ட போது நான் கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று எதுவும் வாங்கிகொடுக்கவில்லை என்றும் சொன்னேன் என்றால்,

சரியல்ல. எதிரிகளை இவ்வழக்கில் இருந்து காப்பாற்ற, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், அது சரியல்ல.

**குறுக்கு விசாரணை 3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பில் –**

இல்லை.

**குறுக்கு விசாரணை 12, 15 எதிரிகள் தரப்பில் –**

இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet